بسم الله الرحمن الرحيم

# துல்ஹஜ் முதல் பத்து நாட்களின் சிறப்புகள்

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# துல்ஹஜ் முதல் பத்து நாட்களின் சிறப்புகள்

1

## மகத்துவமிக்க இறைவன் சத்தியம் செய்யும் மகத்துவமிக்க 10 இரவுகளாகும்

وَلَيَالٍ عَشۡرٖ

பத்து இரவுகளின்

மீது சத்தியமாக !

அல்குர்ஆன் 89:2

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# துல்ஹஜ் முதல் பத்து நாட்களின் சிறப்புகள்

2

நபி (ﷺ) அவர்கள், "வேறு நாட்களில் செய்யும் நற்செயல், இந்த (துல்ஹஜ் முதல்) பத்து நாட்களில் செய்யும் நற்செயலைவிடச் சிறந்ததல்ல" என்று கூறினார்கள். அப்போது மக்கள், "அறப்போரை விடவுமா?" என்று வினவினர். நபி (ﷺ) அவர்கள், "அறப்போரை விடவும்தான்; ஆயினும், தமது உயிரையும் பொருளை யும் அர்ப்பணிப்பதற்காகப் புறப்பட்டுச் சென்று எதையும் திரும்பக் கொண்டு வராத மனிதரைத் தவிர" என்று சொன்னார்கள்.

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புகாரி 969

# துல்ஹஜ் முதல் பத்து நாட்களின் சிறப்புகள்

3

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## மகத்துவமிக்க நாட்கள்

அல்லாஹ்விடத்தில் துல் ஹஜ் மாத முதல் பத்து நாட்களை விட மகத்துவமிக்க நாட்கள் வேறு இல்லை, அந்நாட்களில் செய்யும் நற்செயல்களை விட வேறு நாட்களில் செய்யும் நற்செயல்கள் அல்லாஹ்வுக்கு மிகப் பிரயமானதாக இல்லை. எனவே லாஇலாஹ இல்லல்லாஹ். அல்லாஹு அக்பர், அல்ஹம்து லில்லாஹ் போன்ற திக்ருகளை இந்நாட்களில் அதிகப்படுத்துங்கள்' என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள், அஹ்மத் 5446

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# துல்ஹஜ் முதல் பத்து நாட்களின் சிறப்புகள்

4

## புனிதமான மாதங்களிலுள்ள நாட்களாகும்

“வானங்களும் பூமியும் படைக்கப்பட்ட நாளில் இருந்த (பழைய) நிலைக்குக் காலம் திரும்பிவிட்டது.

ஆண்டு என்பது பன்னிரண்டு மாதங்களாகும். அவற்றில் நான்கு மாதங்கள் புனிதமானவை. (அவற்றில்) மூன்று மாதங்கள் தொடர்ந்து வரக்கூடியவை. அவை துல்கஅதா, துல்ஹிஜ்ஜா மற்றும் முஹர்ரம் ஆகியனவாகும். (மற்றொன்று) ஜுமாதல் ஆகிராவுக்கும் ஷஅபான் மாதத்திற்கும் இடையிலுள்ள “முளர்‘ குலத்தாரின் ரஜப் மாதமாகும்” என்று நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூபக்ரா நுஃபைஉ பின் அல்ஹாரிஸ் (ரலி) அவர்கள், புகாரி 4406